50–

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை பராமரிக்கும் இடங்கள்

வினா எண் 1669–டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர சுற்றுலாத் துறையினரால் பராமரிக்கப்படும் இடங்களின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் ஆகிய இரண்டு இடங்களும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சுற்றுலாத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தொண்டி, ஆற்றாங்கரை ஆகிய இடங்கள் மாவட்ட உலாத்தலங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயமாக வனத் துறையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம், முடிவுற்றது.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி ஒரு பிரச்சினையை எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.டேனியல்ராஜ், நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் எதுவும் கொடுக்காமல் நீங்கள் எழுந்து நிற்கக்கூடாது. என்னிடம் எதுவும் கொடுக்காமல் நான் அனுமதிப்பதில்லை. வேண்டாம், உட்காருங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு.

ஈரோட்டில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சிலையைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு, ஈரோடு நகரில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர்